ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2341/31 - 2023 ජූලි මස 19 වැනි බදාදා - 2023.07.19

2341/31 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: DS/GFG/L&L/5/2013/01.
காணி அமைச்சின் இல.: 4-3/4/2012/D/340.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணத்தின், காலி மாவட்டத்தில், காலி நான்கு கடவைகள் பிரதேச செயலகப் பிரிவின் 101C, தெத்துகொட வடக்கு கிராம அலுவலர் பிரிவின் தெத்துகொட வடக்கு கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தின் மூலம் தயாரிக்கப் பட்ட முன்னேற்றத்திட்டத்தின் வரைபட இல. 810022 கொண்ட முன்னேற்றத்திட்டத்தின் காணித்துண்டின் வலய இல. 06 இன் பத்திர இல. 03 இன் துண்டு இல. 98 மூலம் குறிப்பிடப்பட்டுள்ள 0.2072 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித்துண்டின் விபரங்கள்:

01. துண்டு இல. 98

காணியின் பெயர் : உஸ்வத்த அல்லது குடா ஹெட்டிகேவத்த மற்றும் பண்டிதகேவத்த, வரிப்பண இல. 104; விபரம் : வீட்டுத் தோட்டம், நிலையான கட்டிடம் மற்றும் கலப்புப் பயிர் தோட்டம் உள்ளது; உரிமை கோருவோர்: ஸதர்ன் ஸெண்டர் அல்லது டிஸ்பல்ட்; விஸ்தீரணம் : 0.2072 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம்



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

ஆண்டு செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு காலி நான்கு கடவைகள் பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஐ.எஸ். ஸமரகோன்,
பிரதேச செயலாளர்,
காலி - நான்கு கடவைகள்.

பிரதேச செயலகம்,
காலி - நான்கு கடவைகள்,
2023, யூலை 14.

EOG 07 - 0181